# தாத்தா பூ எங்கே போகிறது?

ஆதாரம்: Book for Children

TAM209D1

| | |
|---|---|
|  | தாத்தா பூ செடியும் ஒட்டுமுள் செடியும் நண்பர்கள். தாத்தா பூ செடி விதைகள் பறந்து செல்லத் தயாராக இருந்தன. அவை ஒட்டுமுள் விதைகளையும் பறந்து செல்ல அழைத்தன. அதற்குள் காற்று வீசியது தாத்தா பூ விதைகள் பறந்தன. |
|  | அதில் ஒரு விதை, ஊசியிலை மரக்கன்றைச் சந்தித்தது; அது எப்படிப் பிறந்தது என்று கேட்டறிந்தது. |
|  | பின் அது அவரை விதைகள் வெடித்துச் சிதறி மண்ணில் விழுவதைப் பார்த்தது; அவை தக்க காலத்தில் செடியாக வளரும் என்பதையும் அறிந்தது. |
|  | பின் தாமரை விதைகள் எவ்வாறு நீரில் மிதந்து சென்று, மண்ணில் புதைந்து, புதிய செடியாக முளைக்கின்றன என்பதைக் கேட்டுத் தெரிந்து கொண்டது. |
|  | களைத்துப் போன தாத்தா பூ விதை மண்ணில் விழுந்து, செடியாக முளைத்துத் தன் நண்பன் ஒட்டுமுள் செடியை அங்கே பார்த்தது |

**வகுப்பறைச் செயல்பாடு:** ஒட்டு முள் விதை குட்டி மானில் மேல் ஒட்டிக்கொண்டபோது யாரையெல்லாம் பார்த்தது. அது அவர்களிடம் என்ன பேசியிருக்கும். ஒரு உரையாடல் எழுது

உதாரணமாக,

ஒட்டு முள் விதை குட்டி மானில் மேல் ஒட்டிக்கொண்டது. மான் குட்டி பூங்கா, தோட்டம், புல்வெளி, புதர்… என்று ஓடியது. தழைகளையும் புல்லையும் தின்றது. அப்போது, ஒட்டுமுள் விதை ஒரு சிறிய கொய்யாச் செடியைப் பார்த்தது. அதனிடம்,

ஒட்டுமுள் விதை: நீ எப்படிப் பிறந்தாய்?

கொய்யாச் செடி: நான் என் மரத்தில், ஒரு பழத்துக்குள் இருந்தேன். பழம் நன்றாகப் பழுத்து வாசனை வந்தது. அப்போது ஒரு கிளி பறந்து வந்து பழத்துக்கு அருகில் உட்கார்ந்தது…

(மாணவர்கள் ஏதேனும் 3 விதைகளைப் (விதை பரவுதலை) பற்றி உரையாடல் கதையாக எழுதலாம். கதையை மாணவர்கள் தங்கள் சொந்த நடையில் எழுதுவற்கான முழு சுதந்திரத்தையும் ஆசிரியர்கள் அளிக்க வேண்டும்)